செ.வெ.எண்: 19 நாள்: 07.01.2021

**புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் அதிநவீன இருதய சிறப்பு சிகிச்சைப் பிரிவு துவக்கம்.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (07.01.2021) புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய இருதய சிறப்பு சிகிச்சைப் பிரிவை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துவக்கப்பட்டு சி.டி ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன், டயாலிசிஸ் பிரிவு, புற்றுநோய் சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு உயர்தர மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளுடன் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

இவற்றிற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் பொதுமக்களுக்கு மிகுந்த பயனை தரக்கூடிய புதிய இருதய சிறப்பு சிகிச்சைப் பிரிவு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கேத்லாப் சிகிச்சைப் பிரிவு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்பயனாக பொதுமக்களுக்கு இருதய மாரடைப்பு இரத்தக்குழாய் அடைப்பு கண்டறிதல், இருதய மாரடைப்பு இரத்தக்குழாய் அடைப்பை பலூன் சிகிச்சை, ஸ்டணட் சிகிச்கை மூலம் சரி செயல்தல், இருதய வாழ்வு சுருக்க நோய்களுக்கான பலூன் சிகிச்சை, பிறவு இருதய நோய்களுக்கான ஓட்டைகளை நவீன கருவி மூலம் அடைக்கும் சிகிச்சை, செயற்கை இருதய துடிப்பு கருவி பொருத்துதல், இருதயத்தில் உள்ள இரத்தக்குழாயில் அழுத்தங்களை கண்டறிதல், இரத்தக்குழாய்களில் உள்ள அடைப்புகளை சரிசெய்தல் போன்ற பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். ஏழை, எளிய மக்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லாமல் இச்சிகிச்சை வழங்கப்படும்.

மேலும் புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு மிகுந்த பயன் தரக்கூடிய கேத்லாப் சிகிச்சையின் மூலம் பொதுமக்களுக்கு உண்டான அனைத்து இதய சிகிச்சைகளும் ஓரிடத்தில் வழங்கப்படுவதால் இதய சிகிச்சைக்கு பிற மாவட்டங்களுக்கு செல்வது முற்றிலும் தவிர்க்கப்படும். இது புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு ஒரு வரபிரசாதமாகும். இதேபோன்று தொடர்ந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு புதிய மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அரசு மருத்துவக்கல்லூரியில் ஏற்படுத்தப்படும்.

எனவே இதனை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்தி நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எல்.பாலாஜிசரவணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மு.ராஜநாயகம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயலெட்சுமி, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பூவதி, மாவட்ட வேளாண் விற்பனை குழுத்தலைவர் பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானனோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**